# நீங்கள் அரசியல்ரீதியாக முகங்கொடுக்கும் ஆளொருவரா?

## நீங்கள்,

உள்நாட்டிலோ அல்லது வெளிநாடொன்றின் மூலமாகவோ முக்கிய பகிரங்க தொழிற்பாடுகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அல்லது பன்னாட்டு அமைப்பொன்றில் உள்ள ஆளொருவராயின், அதாவது,

- ✦ அரச அல்லது அரசாங்கமொன்றின் தலைவராயின்,
- ✦ அரசியல்வாதியொருவராயின்,
- ✦ மூத்த அரசாங்க அலுவலரொருவராயின்,
- ✦ நீதித் துறை அலுவலரொருவராயின்,
- ✦ இராணுவ அதிகாரியொருவராயின்,
- ✦ அரசிற்குச் சொந்தமான கூட்டுத்தாபனத்தின்/அரசாங்கத்தின் அல்லது சுயநிர்ணயம் கொண்ட நிறுவனத்தின் மூத்த நிறைவேற்றலுவலரொருவராயின் (நடுத்தர பதவிவகிப்போரை அல்லது கனிஷ்ட பதவிவகிப்போரை உள்ளடக்காது) அல்லது,
- ✦ மேற்குறித்தவர்களின் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களாயின் அல்லது கூட்டாளிகளாயின்,

நிதியியல் நிறுவனங்கள் அத்துடன் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் மூலம் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தை நடாத்துகின்ற போது, நீங்கள் அரசியல்ரீதியாக முகங்கொடுக்கும் ஆளொருவராக வகைப்படுத்தப்படுவீர்கள்.

**மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்தின் கீழ் நீங்கள் உள்ளடங்குவீர்களாயின், நிதியியல் நிறுவனங்களுடன் மற்றும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களுடன் கொடுக்கல்வாங்கலொன்றை மேற்கொள்ளும் போது அரசியல் ரீதியாக முகங்கொடுக்கின்ற ஆளொருவராக உங்களது அந்தஸ்தை தெரியப்படுத்துவதற்கு நீங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.**

### நிதியியல் நிறுவனங்கள்

**உதாரணம்:**

- ◆ உரிமம்பெற்ற வங்கிகள்
- ◆ உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்
- ◆ பங்குத்தொகுதி தரகுக் கம்பனிகள்
- ◆ பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர்கள்
- ◆ காப்புறுதிக் கம்பனிகள்
- ◆ மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்

### பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள்

**உதாரணம்:**

- ◆ கசினோக்கள்
- ◆ உண்மைச் சொத்து முகவர்கள்
- ◆ இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வணிகர்கள்
- ◆ கணக்காளர்கள், சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள் மற்றும் வேறு சுயாதீன சட்ட தொழில்சார் நிபுணர்கள்
- ◆ நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் கம்பனி பணி வழங்குநர்கள்

நிதியியல் நிறுவனங்களும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களும் தமது வாடிக்கையாளர்களுக்கான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது, வாடிக்கையாளர் அல்லது பயன்பெறு சொந்தக்காரர் அரசியல்ரீதியாக முகங்கொடுக்கும் ஆளொருவரா என்பதனை நிர்ணயிப்பதற்கு, உள்ளகக் கொள்கைகளை, நடைமுறைகளை மற்றும் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு அவை வேண்டப்பட்டுள்ளன.

இது, 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம், 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகள், 2018 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பெயர்குறிக்கப்ட்ட நிதியல்லா வியாபார (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகள் என்பவற்றின் கீழான தேவைப்படுத்தலொன்றாகும்.

வாடிக்கையாளர்களிடமிருந்து அத்தகைய தகவல்களை சேகரித்தல் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்றாகும். ஆகையினால், அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும்

**அரசியல்ரீதியாக முகங்கொடுக்கின்ற ஆட்கள் தொடர்பான மேலதிக தகவல்களுக்காக, நிதியியல் உளவறிதல் பிரிவு மூலம் வெளியிடப்பட்ட “2019ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க அரசியல்ரீதியாக முகங்கொடுக்கின்ற ஆட்களை அடையாளங்காணுதல் மீதான வழிகாட்டல்” இனைப் பார்ப்பதற்கு QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.**

உங்களுக்கு மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின், தயவுசெய்து நிதியியல் உளவறிதல் பிரிவைத் தொடர்புகொள்ளவும்.


මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

☎ 0112 477 125 | 🖷 0112 477 692 | @ fiu@cbsl.lk | www.fiusrilanka.gov.lk